பக்கங்கள் 17+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 16 புதன்கிழமை 31.12.2025 | அதிர்வு 154

## கொழும்பில் துப்பாக்கிச்சூடு! 16 வயது சிறுமி படுகாயம்!!



கொழும்பில் இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் சிறுமி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கொஹுவலை, சரணங்கர 03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# தையிட்டி விகாரைக்காகக் கையகப்படுத்தப்பட்ட காணிகள் நான்கு கட்டங்களாக விடுவிக்கப்படும்

### உரிமையாளர்களிடம் யாழ். மாவட்ட செயலர் உறுதி




(எஸ்.நிதர்ஷன்)

“தையிட்டியில் திஸ்ஸ விகாரைக்காகக் கையகப் படுத்தப்பட்ட காணிகளில் விகாரை அமைந்துள்ள காணியைத் தவிர ஏனைய காணிகளில் பிற கட்டுமானங்கள் அகற்றப்பட்டு அவற்றை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று எமக்கு யாழ்ப்பாணம் மாவட்ட செயலர் ம.பிரதீபன் உறுதியளித்துள்ளார்.” 03

# சாவகச்சேரியில் குரங்குகளைக் கலைக்க துப்பாக்கிகளை வழங்கிய கஜேந்திரகுமார்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். தென்மராட்சி, சாவகச்சேரியில் தொல்லை கொடுக்கும் குரங்குகளைக் கட்டுப்படுத்துவதற்காகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந் திரகுமார் பொன்னம்பலம் எம். பி. துப் பாக்கிகளை வழங்கியுள்ளார்.

நீண்டகாலமாகக் குரங்குகளின் தொல்லையால் சாவகச்சேரி கமக்காரர்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டு வருகின் றனர். அவர்கள், குரங்குகளால் பயிர்கள் அழிவதைக் 03



# கொழும்பு மாநகர சபையில் என்.பி.பியின் பாதீடு வெற்றி!



தெற்கு அரசியல் களத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி இருந்த கொழும்பு மாநகர சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

பாதீடு மீதான வாக்கெடுப்பின்போது ஆதரவாக 58 வாக்குகளும், எதிராக 56 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இதற்கமைய மேலதிக 2 வாக்குக ளால் பாதீடு நிறைவேறியது.

தேசிய மக்கள் சக்தியின் ஆளுகை யின் கீழுள்ள கொழும்பு மாநகர சபை யின் முதலாவது வரவு- செலவுத் திட்டம் கடந்த 22 ஆம் திகதி முன்வைக்கப் பட்டது.

இதன்போது வரவு – செலவுத் திட்டத் துக்கு ஆதரவாக 57 வாக்குகளும், எதிராக 60 வாக்குகளும் அளிக்கப் பட்டன.

இதற்கமைய மேலதிக 3 வாக்கு களால் பாதீடு தோற்கடிக்கப்பட்டது. இது தேசிய மக்கள் சக்திக்கு அரசியல் ரீதியிலான பின்னடைவு எனக் கருதப் பட்டது.

இந்நிலையிலேயே வரவு – செலவுத் திட்டம் இன்று 2ஆவது தடவையாக முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட் டுள்ளது.

மக்கள் நலன் மிக்க பாதீடுக்கு ஆத ரவளித்த அனைவருக்கும் கொழும்பு மாநகர சபை மேயர் நன்றி தெரிவித்துள்ளார்.

### 2010 முதல் 2025 வரையான காலப் பகுதியில்

# கொழும்பு மாநகர சபையில் இடம்பெற்ற மோசடிகளை விசாரிப்பதற்கு ஆணைக்குழு

## ஜனாதிபதி அதிரடி நடவடிக்கை



கொழும்பு மாநகர சபையில் கடந்த காலங்களில் இடம்பெற்றன என்று கூறப்படும் ஊழல், மோசடிகள் தொடர் பில் விசாரணை செய்வதற்காக ஜனாதி பதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள் ளது.

மேல் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி பியசேன ரணசிஹ்க தலைமை யில் ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்கவால் அமைக்கப்பட்டுள்ள இந்தக் குழுவில் மூவர் இடம்பெற் றுள்ளனர்.

முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டி.எஸ். விக்கிரமசிங்ஹ, கணக்காய்வாளர் சேவை அதிகாரி ஈ.ஆர்.எம்.எஸ்.எச். ஏக்கநாயக்க ஆகி யோரும் மேற்படி குழுவுக்குப் பெயரி டப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

2010 முதல் 2025 வரையான காலப் பகுதியில் கொழும்பு மாநகர சபையில் இடம்பெற்றுள்ளன எனக் கருதப்படும் ஊழல், மோசடி, சொத்துக் களின் குற்றவியல் ரீதியான கையாடல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இந்தக் குழு விசாரணை நடத்தவுள்ளது.

அதன்பின்னர் தனது பரிந்துரை அறிக்கையை மேற்படி குழு, ஜனாதிபதியிடம் கையளிக்கும்.

# வைத்தியசாலையில் துப்பாக்கிச்சூடு! சிகிச்சை பெற்று வந்த கைதி காயம்!!

களுத்துறை, நாகொடை வைத்திய சாலைக்குள் நுழைந்த இனந்தெரியாத ஒருவர், வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டிருந்த கைதி ஒருவர் மீது துப்பாக் கிச்சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள் ளார்.

இன்று காலை 6 மணியளவில் இடம்பெற்ற இந்தத் துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த கைதி, களுத்துறை சிறைச்சாலையைச் சேர்ந்த கைதி என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல்காரரான “ரஜவத்தே சத்துவா” என அழைக்கப்படும் திலிப் சத்துரங்க என்ற இவர் இம்மாதம்




13 ஆம் திகதி போதைப்பொருள் கடத் தல் தொடர்பில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு களுத்துறை நீதவான் நீதிமன்ற உத்தரவின் கீழ் களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டி ருந்துள்ளார்.

இந்நிலையில், மேற்படி கைதி கடந்த 29 ஆம் திகதி சிறைச்சாலைக்குள் ஏனைய கைதிகளுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக பலத்த காயமடைந்து நாகொடை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் இந்தத் துப்பாக்கிச்சூட்டுக்கு முகம்கொடுத்துள் ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட் டுள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுக்கு ரிவோல் வர் ரக துப்பாக்கி ஒன்று பயன்படுத் தப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பான மேலதிக விசார ணைகளைப் பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தையிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு காணி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தையிட்டி விகாரைக்காகக் காணிகளை இழந்தவர்களுக்கும் யாழ். மாவட்ட செயலருக்கு இடையில் இன்று புதன் கிழமை சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பு தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே காணி உரிமையாளர்கள் மேற்கண்டவாறு கூறியுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

"யாழ். மாவட்ட செயலருடனான சந்திப்பின் போது, எமது காணிகளை விடுவிப்பது தொடர்பில் ஆராயப்பட்டு யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

அதன்போது, தையிட்டி திஸ்ஸ விகாரைக்காகக் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளில் மேற்கு பக்கமாக உள்ள



காணிகளை முதல் கட்டமாக விடுவிப்பதாகவும், ஏனைய காணிகளில் விகாரை தவிர்ந்த ஏனைய கட்டுமானங்களை அகற்றி அந்தக் காணிகளையும் உரிமையாளர்களிடம் கையளிக்க இணக்கம் காணப்பட்டது. அதற்காகக் காணி விடுவிப்பானது 4 கட்டங்களாக முன்னெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது

விகாரை உள்ள காணி மூன்று தரப்பினருக்குச் சொந்தமானதாகக் காணப்படுகின்றது. அவர்களுக்கான தீர்வு குறித்து முடிவு எடுக்கப்படவில்லை. மாற்றுக் காணி வழங்குவதா அல்லது நட்டஈடு வழங்குவதா என்று எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

இந்தச் சந்திப்பில் எமக்கு உறுதிமொழிகள் வழங்கப்பட்டனவே தவிர தீர்வுகளாக எமது காணிகளை எம்மிடம் ஒப்படைக்காதமையால், நாம் திட்டமிட்டவாறு எதிர்வரும் 3ஆம் திகதி போராட்டத்தை முன்னெடுப்போம்." – என்றனர்.

## சாவகச்சேரியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்படுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யிடம் கோரியமைக்கமைவாக சாவகச்சேரியில் பிரதேசத்தில் குரங்குகளைச் சுட்டுக் கலைப்பதற்காக இறப்பர் துப்பாக்கிகளை வாங்க 2025ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட நிதியில் இருந்து 10 இலட்சம் ரூபாவை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. ஒதுகீடு செய்திருந்தார்.

அதற்கமைய கிடைக்கப் பெற்ற நிதியில் இருந்து 20 கமக்காரர்களுக்குக் குரங்குகளைச் சுட்டுக் கலைப்பதற்காகத் துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன.

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதி, போதியவத்தை பகுதியில் உள்ள ஒரு வீட்டை இலக்குவைத்து நேற்று இரவு துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் 16 வயதுடைய சிறுமி ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர், குறித்த வீட்டின் மீது துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த சிறுமி களுபோவில போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக கொஹுவலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அமைச்சரின் தவறான கூற்று

கணக்காய்வாளர் நாயகத்தை நியமிப்பதில் அரசமைப்புக் கவுன்ஸில் குறுகிய நோக்கங்களின் அடிப்படையில் தனது எல்லையை மீறி செயற்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்திருக்கின்றார்.

இது, அவரின் தனிப்பட்ட கருத்து அல்ல. அமைச்சரவைப் பேச்சாளர் என்ற முறையில் அவர் முன்வைக்கும் கருத்து என்பதால் இது அரசாங்கத்தின் நிலைப்பாடாகவே கொள்ளப்பட வேண்டும்.

அரசமைப்புக் கவுன்ஸில் ஏன் உருவாக்கப்பட்டது, அது எவ்வாறு செயல்படுகின்றது, எதற்காக அதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது என்பவற்றை மறந்து, அரசமைப்புக் கவுன்ஸிலின் பொறுப்புக்களை கவனத்தில் எடுக்காது, வெளியிடப்பட்ட கருத்தாகவே இதைக் கொள்ள வேண்டியிருக்கின்றது.

நிறைவேற்றதிகார ஜனாதிபதியாகப் பொறுப்பேற்பவர், கட்டுமட்டில்லாத அந்த அதிகாரத்தை, உயர் நிலைப் பதவிகளுக்கு ஆள்களை நியமிக்கும்போது தவறாகப் பிரயோகிக்காமல் இருப்பதற்கான கட்டுப்பாட்டுக் கட்டமைப்பாகத்தான் - check and balance ஏற்பாடாகத்தான் - அரசமைப்பு கவுன்ஸில் கொண்டுவரப்பட்டது.

அப்படி இருந்தும் கூட நிறைவேற்றதிகார ஜனாதிபதிகள், தங்களுடைய அரசியல் செல்வாக்குகள் மூலம் அரசமைப்புக் கவுன்ஸிலுக்குள் புகுந்து விளையாடி, தங்கள் கைங்கரியங்களை நிறைவேற்றி வருகிறார்கள் என்பது நாட்டின் கடந்த கால அனுபவம்.

கடந்த அரசின் காலத்தில் அந்தச் சமயம் பதவியில் இருந்த சபாநாயகரை ஒரு ‘ஜோக்கர்’ போல பயன்படுத்தி, அரசமைப்புக் கவுன்ஸில் வாக்களிப்பு முடிவுக்கு ஒரு புது அட்சர கணித விளக்கம் கொடுத்து, அதன் அடிப்படையில் தேசபந்து தென்னைக்கோனை அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொலிஸ் மா அதிபராக நியமித்தமையை நினைவூட்ட விரும்புகிறோம்.

இந்த விவகாரம் இப்போது உயர் நீதிமன்ற விசாரணையில் இருப்பதால் அது பற்றி அதிகம் இங்கு விவரிக்காவிட்டாலும், அத்தகைய அத்துமீறல்களை கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பில் அரசமைப்புக் கவுன்ஸில் இருக்கின்றது என்பது மறுத்து, மறந்து, மறைத்து பேசத்தக்கது அல்ல.

அப்போது அந்த அரசமைப்பு கவுன்ஸிலில் அந்த நியமனத்திற்கு எதிராக ஒற்றைக் காலில் நின்ற சிவில் சமூகப் பிரதிநிதிகள் மூவரும் தான் இப்போதும், இந்த ஜனாதிபதியினால் கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு பரிந்துரைக்கப்பட்ட பெயர்களை நிராகரித்திருக்கிறார்கள் என்பதை அமைச்சர் நளிந்த ஜய திஸ்ஸ மறந்துவிடக்கூடாது.

அரசமைப்புக் கவுன்ஸில் ஏற்பாட்டின்படி அந்த சபையின் சபாநாயகர் தவிர்ந்த ஏனைய ஒன்பது உறுப்பினர்களில் பெரும்பான்மையினரின் ஆதரவை - வரவேற்பை - பெறத்தக்க நபரை உரிய பதவிக்கு ஜனாதிபதி பரிந்துரைக்கும் வரை இந்த நிராகரிப்பு தொடரும். அது தவிர்க்க முடியாதது. அதுதான் அரசமைப்புக் கவுன்ஸிலின் கடப்பாடு. பொறுப்பு. செயன்முறை.

ஆயினும், தற்போதைய அரசமைப்பு கவுன்ஸிலில் அங்கம் வகிக்கும் மூன்று சிவில் சமூகப் பிரதிநிதிகளின் பதவிக்காலமும் அடுத்த ஓரிரு தினத்தில் முடிவுக்கு வருவதால் அதன் பின்னர் தாம் விரும்பிய மூவரை அந்தப் பதவியில் நிறுத்திவிட்டு தமக்கு தேவையான வரை ஜனாதிபதி கணக்காய்வாளர் நாயமாக நியமிக்க முடியும் என்பது தான் இப்போது உள்ள துரதிஷ்டமான நிலையாகும்.

## சட்டவிரோதமாக மாட்டு இறைச்சியை

# புங்குடுதீவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வந்தவர் வேலணையில் கைது!

(எஸ். நிதர்ஷன்)

சட்டவிரோதமான முறையில் மாட்டு இறைச்சியை வெட்டி மீன் கொண்டு செல்லும் பெட்டியில் மறைத்து மோட்டார் சைக்கிளில் எடுத்துச் சென்ற ஒருவர் வேலணை அராலிச் சந்திப் பகுதியில் ஊர்காவற்றுறை பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று அதிகாலை வேலணை அராலிச் சந்தியில் இடம் பெற்றது என்று ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவந்துள்ள தாவது,

இன்று அதிகாலை 5.30 மணியளவில் புங்குடுதீவு பகுதியில் வைத்து சட்ட விரோதமான முறையில் இறைச்சியாக் கப்பட்ட 35 கிலோ மாட்டு இறைச்சியுடன் மோட்டார் சைக்கிளில் மீன் வியாபாரி என்ற போர்வையில் வந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புங்குடுதீவு மடத்துவெளியைச் சேர்ந்த குறித்த நபர் ஊர்காவற்றுறை போக்கு வரத்து பொறுப்பதிகாரி சமன் குமார தலைமையிலான பொலிஸ் அணியின ரால் அப்பகுதியில் முன்னெடுத்திருந்த விசேட நடவடிக்கையின் போது கைது



செய்யப்பட்டுள்ளார். சந்தேகத்தின் பேரில் வழிமறித்து சோதனை முன்னெடுக்கப் பட்ட வேளை அவர் கைது செய்யப்பட்டுள் ளார்.

இதன்போது மீன் பெட்டிக்குள் மறைத்து வைக்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்ட தலா ஒரு கிலோ நிறைகொண்ட 35 இறைச்சிப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. குறித்த நபர் கைது செய்யப்பட்டதுடன் மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத் துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

விசாரணைகளின் பின்னர் குறித்த நபர் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார் என்று ஊர் காவற்றுறை பொலிஸார் தெரிவித்த னர்.

இதேவேளை, வேலணை பிரதேச ஆளுகைக்குள் சட்டவிரோதமான முறையில் மாடுகள் களவாடப்படு வதும் இறைச்சியாக்கப்பட்டு யாழ்ப் பாணம் கொண்டு செல்லப்படுவதாகவும் இதில் பெறுமதி மிக்க வளர்ப்பு மாடு களும் சூறையாடப்படுகின்றன என்றும் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்த விடயத்தைக் கட்டுப்படுத்துவதில் ஊர்காவற்றுறை பொலிஸார் அக்கறை கொள்வதில்லை என்று பிரதேச மக்க ளும் பிரதேச சபை உறுப்பினர்களும் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன் வைத்து வந்த நிலையில் இன்று குறித்த கைது இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# மட்டக்களப்பில் மழையை அடுத்து முதலைகளின் நடமாட்டம் அதிகரிப்பு!



(மட்டக்களப்பு நிருபர்)

வடகீழ் பருவப்பெயர்ச்சி மழை வீழ்ச்சி தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் சற்று ஓய்ந்துள்ள நிலையை அவதா னிக்க முடிகின்றது. எனினும் ஏற்கனவே பெய்த மழையால் மட்டக்களப்பு வாவியை அண்மித்துள்ள களுதாவளை, களு வாஞ்சிகுடி, தேற்றாத்தீவு, மகிளூர், உள் ளிட்ட பல கிராமியக் குளங்கள் நிரம்பி யுள்ளன.

இந்த நிலையில் மட்டக்களப்பு வாவி யிலுள்ள முதலைகள் கிராமியக் குளங் களுக்குள் வந்துள்ளன. இவ்வாறு குளங் களில் இருக்கும் முதலைகளில் இரவு வேளைகளில் வீதிகளில் நடமாடுவதை அவதானிக்க முடிகின்றது.

எனவே இரவு வேளைகளில் அப்பகுதி களில் நடமாடுபவர்கள் மிகவும் அவ தானத்துடன் செயற்பட வேண்டும் என சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்ற னர்.

களுதாவளைப் பகுதியில் செவ்வாய்க் கிழமை இரவு பாரிய முதலை ஒன்று பிரதான வீதியை ஊடறுத்து கடந்து செல்வதையும், மற்றுமொரு முதலை வீதிக்கு வந்துள்ளதையும் அவதானிக்க முடிந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஓஹியா-ஹோர்டன்தென்ன வீதியில் மரம் முறிந்து வீழ்ந்ததால் நெருக்கடி!

**(நடராஜா மலர்வேந்தன்)**

ஓஹியா – ஹோர்டன்தென்ன பிரதான வீதியில் இன்று மரமொன்று முறிந்து விழுந்ததால் இவ்வீதியூடான போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளது.

மரத்தை வெட்டி வழக்கமான போக்குவரத்து பாதையாக சீரமைக்கப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# ஆசிரியர் பணியிலுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நிரந்தர நியமனம் இன்றி 5 வருடங்களாக ஏமாற்றத்தில்!

## மன்னார் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு கையளிப்பு





**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னாரில் ஆசிரியர் பணிக்காக அமர்த்தப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஐந்து ஆண்டுகளாகியும் நியமனம் கிடைக்காத நிலையில் தமக்கு நிரந்தர நியமனத்தை வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மன்னார் அலுவலகத்தில் இன்று புதன்கிழமை முறைப்பாடு செய்துள்ளனர்.

அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆசிரியர் பணிக்காக அமர்த்தப்பட்டு ஐந்து ஆண்டுகள் ஆகியும் இதுவரை அவர்களுக்கு நியமனம் வழங்கப்படவில்லை என்று பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் தெரிவித்துள்ளனர்.

நியமனங்களை கோரி பல போராட்டங்களை முன்னெடுத்து இருந்தாலும் கடந்த அரசு தற்போதைய அரசும் குறித்த பட்டதாரிகளை கவனத்தில் கொள்ளவில்லை என்று கவலை தெரிவித்துள்ளனர்.

அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக ஆசிரியர் பணியை முன்னெடுத்து வருகிறார்கள்.

இந்த நிலையில் இன்று புதன்கிழமை நாடளாவிய ரீதியில் ஆசிரியர்களுக்கான நியமனத்தை வழங்க கோரி கோரி இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாட்டைக் கையளித்துள்ளனர்.

இந்த நிலையில் இன்று மன்னாரில் உள்ள சுமார் 170 இற்கும் மேற்பட்ட ஆசிரியர் பணியை முன்னெடுக்கும் பட்டதாரி மாணவர்கள் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு மன்னார் அலுவலகத்தில் தமது கையெழுத்து அடங்கிய முறைப்பாட்டைக் கையளித்துள்ளனர்.

மன்னார் மாவட்ட பட்டதாரிகள் ஒன்றியத்தின் தலைவர் ரீ. எம். றாகித் தலைமையில் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.



# திருமலை வாசல் கவிதை சஞ்சிகையின் ‘திருகோணமலை சிறப்பிதழ்’ வெளியீடு!

(ஹுஸ்பர் ஏ.எச்.)

வாசல் வாசகர் வட்டத்தின் வெளியீடான வாசல் கவிதை சஞ்சிகை வெளியீடு கடந்த சனிக்கிழமை திருகோணமலை மாநகர சபை பொது நூலக கேட்போர் கூடத்தில் வாசல் வாசல் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு, வாசல் வாசகர் வட்டத்தின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் அரசரெத்தினம் அச்சுதனின் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப், பிரதம விருந்தினராக திருகோணமலை – சேனையூர் அனாமிகா கலை பண்பாட்டு மையத்தின் தலைவர் கலாபூஷணம் இரா.இரத்தினசிங்கம் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக திருகோணமலை மாவட்டத்தின் மூத்த எழுத்தாளர்களான நீங்களும் எழுதலாம் சஞ்சிகையின் ஆசிரியர் கவிஞர் எஸ்.ஆர்.தனபாலசிங்கம், கவிஞர் செ.ஞானராசா, கவிஞர் ஜெனீரா தௌபீக் ஹைறுல் அமான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிரதம ஆசிரியர் உரையை வாசல் கவிதை சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் ஊடகவியலாளர் ச.திருச்செந்தூரன் நிகழ்த்தினார். ‘வாசல் நோக்கு’ என்ற தலைப்பில் சிறப்புரையை திருகோணமலை தமிழ்ச்சங்கத்தின் தலைவர் மூத்த எழுத்தாளர் கலாபூஷணம் திருமலை நவம் ஆற்றினார்.

இந்த நிகழ்வில், திருகோணமலை மாவட்டத்தின் மூத்த எழுத்தாளர்களான நீங்களும் எழுதலாம் சஞ்சிகையின் ஆசிரியர் கவிஞர் எஸ்.ஆர்.தனபாலசிங்கம், கவிஞர் செ.ஞானராசா, கவிஞர் ஜெனீரா தௌபீக் ஹைறுல் அமான் ஆகியோர் ‘கலைக்கேசரி’ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். மேலும் நிகழ்வின் பிரதம விருந்தினருக்கு சிறப்பு கௌரம் வழங்கப்பட்டது.

தமிழ்மொழி வாழ்த்தைத் திருகோணமலை இந்துக் கல்லூரி மாணவன் அ.கோகுலரமணன் வழங்கினார். வரவேற்புரையை ஊடகவியலாளர் பா. விபூசிதனும் நன்றியுரையை இளங்கலைஞர் சிறிசெல்வம் ஜெயசிறியும் நிகழ்த்தினர். நிகழ்ச்சித் தொகுப்பை செல்வி .ரூ.ஆன் இவானா வழங்கினார்.

நிகழ்வில் எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.







# மட்டக்களப்பில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள கர்ப்பிணிகள் உட்பட 336 குடும்பங்களுக்கு உதவி

## இளம் பெண்ணியக் குழு அமைப்பு ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கீடு









**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் 'டித்வா' புயல் காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு இளம் பெண்ணிக்குழு அமைப்பு யுனெப்ஸ் அமைப்பின் விருத்தி (UNOPS-VRIDDHI) திட்டத்தின் மனிதாபிமான உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் நிதி அனுசரணையுடன் மூன்று கட்டமாக கோறளைப்பற்று மத்தி, கோறளைப்பற்று மேற்கு, ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 80 குடும்பங்களுக்கான உலர் உணவு பொதிகள் மற்றும் 256 கர்ப்பிணித் தாய்மார்கள் சுடுநீர் போத்தல் உட்பட்ட பொருள்கள் அடங்கிய பொதிகளை ஞாயிற்றுக் கிழமை அமைப்பின் தலைவி அஜானி காசிநாதர் தலைமையில் வழங்கியது.

இளம் பெண்ணிக்குழு அமைப்பு சூறாவளி மற்றும் வெள்ளத்துக்குப் பதிலளிக்கும் விதமாக, யுனிசெப் அமைப்பின் விருத்தித் திட்டத்துடன் இணைந்து, பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு ஒரு மில்லியன் ரூபா மதிப்புள்ள உடனடி மனிதாபிமான உதவிகளை வழங்கும் திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு முன்னுரிமை அளித்து முதற்கட்டமாக ஏறாவூர், களுவங்கேணி மற்றும் ஆறுமுகத்தான் குடியிருப்பு கிராம பிரிவுகளைச் சேர்ந்த 122 கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சுடுநீர் போத்தல் உட்பட்ட பொருள்கள் அடங்கி பொதிகள் வழங்கப்பட்டன.

இரண்டாம் கட்டமாக வேப்பவெட்டுவான் கிராம சேவகர் பிரிவு ஏறாவூர் பற்று பிரதேசத்தில் 80 குடும்பங்களுக்கான உலர் உணவு பொதிகள் இரண்டாம் கட்டமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன.

மூன்றாம் கட்டமாகக் கோறளைப்பற்று மத்திய மற்றும் கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள காவத்தமுனை, பிறைந்துறைச்சேனை, மாஞ்சோலை, பதுரியா பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட 134 கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சுடுநீர் போத்தல் உட்பட்ட பொருள்கள் அடங்கிய பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

அந்தந்தப் பகுதி கிராம உத்தியோகத்தர்கள், பொது சுகாதார மருத்துவர்கள், மகளிர் மேம்பாட்டு அதிகாரிகள் உட்பட்டோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு பொதிகள் வழங்கி வைத்தனர்.

# காத்தான்குடியில் சுற்றுலா வசதிகள் மேம்பாடு; ஹிஸ்புல்லாஹ் எம்.பியால் வேலைத் திட்டம்!

(எஸ். சினீஸ் கான்)

காத்தான்குடி பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் சுற்றுலா பயணிகளின் வசதிகளை மேம்படுத்தும் நோக்கில், நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வின் முயற்சியின் பலனாக முன்னெடுக்கப்பட்டு வரும் கடற்கரை மற்றும் அதனை அண்டிய சுற்றுலாப் பயணிகள் வருகை இடங்களின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை, ஹிஸ்புல்லாஹ் எம்.பி. நேரில் சென்று பார்வையிட்டார்.

காத்தான்குடா நகர சபை உறுப்பினர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் இணைந்து இதன் முன்னேற்றம் தொடர்பில் பார்வையிட்டார்.

இதன்போது, தற்போது நடைமுறையில் உள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மேலதிக வேலைத் திட்டங்கள் குறித்து மதிப்பீட்டு அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும், நடைபெற்றுவரும் பணிகளை விரைவாக நிறைவு செய்து பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் பயன்பாட்டுக்காகக் கையளிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கப்பட்டது.

காத்தான்குடி நகரின் சுற்றுலா வளர்ச்சியை ஊக்குவித்து, உள்ளூர் மக்களுக்கும் வெளிநாட்டு பயணிகளுக்கும் சிறந்த வசதிகளை வழங்கும் நோக்கில், ஹிஸ்புல்லாஹ் எம்.பியின் நேரடிக் கண்காணிப்பில் முன்னெடுக்கப்படும் முயற்சிகள் முக்கியமானதாக அமைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முல்லை மாவட்டத்தில் பிரீமியர் லீக்: கிரிக்கெட் வீரர்களுக்கான மெகா ஏலம்!




(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கிரிக்கெட் வீரர்களை அடையாளம் காணவும், அவர்களின் திறமையை உயர்த்தும் நோக்குடன் நடத்தப்படும் முல்லை பிரீமியர் லீக் (Mullai premier league) கடின பந்து கிரிக்கெட் வீரர்களுக்கான மெகா ஏலம், முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சிறந்த மற்றும் திறமையான வீரர்களை தேர்ந்தெடுத்து, தேசிய மற்றும் சர்வதேச அளவுகளில் அவர்கள் பிரபலமடைய வழிவகுப்பதை முதன்மையான இலட்சியமாக கொண்ட இந்தப் போட்டி முல்லைத்தீவு மாவட்ட அளவில் நடைபெறும் பிரமாண்டமான முன்னெடுப்பாகும்.

முல்லைத்தீவு மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் 6 அணிகள் குறித்த ஏலத்தில் பங்கேற்றிருந்தன. ஒவ்வொரு அணிக்கும் 150,000 புள்ளிகள் வழங்கப்பட்டு, ஒரு அணியில் இரண்டு வீரர்கள் தக்கவைக்கப்பட்டு அந்த வீரர்களுடன் ஒரு அணிக்காக 15 வீரர்களை தேர்வு செய்ய வேண்டும் எனும் விதிமுறையிலே ஏலம் நடைபெற்றிருந்தது.

முல்லை பிரீமியர் லீக் போட்டியில் குருந்தூர் அணியை இ.கவாஸ்கரும், முல்லை டைமன் அணியைக் கெ.கஜேந்திரனும், புதுவை புயல்கள் அணியை கெ.ஜனீந்திரகாந்தும், முல்லை வாரியர்ஸ் அணியை எம்.நிஷாக்கும், முல்லை அக்னி அணியை எஸ்.நிமாகரனும், முல்லை ஆர்.பி.கிங்ஸ் அணியை ஆர்.றுபீசனும் அணிகளின் உரிமையாளர்களாக தங்களை முன்னிறுத்தி வீரர்களை முன்னோக்கி நகர்த்த தங்கள் அணிக்காக வீரர்களை போட்டியிட்டு தேர்வு செய்திருந்தனர்.

முல்லை பிரீமியர் லீக் (MPL) போட்டிகள் 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இரண்டாவது கிழமை ஆரம்பமாகி கடினபந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் மிகவும் பிரமாண்டமாக நடத்தப்பட்டு, அனைத்து தரப்பினரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# வடக்கு மாகாண சுற்றுலாத்துறைக்கு போதியளவான ஆளணிகள் இல்லை!

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு











வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத் துறை படிப்படியாக வளர்ச்சியடைந்து வருகின்ற போதிலும், அத்துறையில் போதியளவான பயிற்றப்பட்ட ஆளணிகள் இல்லாத நிலை காணப்படுகின்றது. எனினும், தற்போதைய இளைய சமூகம் சுற்றுலாத்துறை சார் தொழில் வாய்ப்புகள் தொடர்பில் மிகுந்த அக்கறையுடன் உள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. எனவே, எதிர்காலத்தில் சுற்றுலாத்துறை மேலும் விரிவடையும்போது, அதற்கான ஆளணிகளை இங்கிருந்தே வழங்கக் கூடிய சூழல் உருவாகும்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நம்பிக்கை வெளியிட்டார்.

வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் ஏற்பாட்டில், 'வடக்கு மாகாண சுற்றுலா விருதுகள் - 2025' மற்றும் 'இராமாயணம்', 'முருகன்' ஆகிய ஆன்மீகச் சுற்றுலாத் தடங்கள் தொடர்பான நூல் வெளியீட்டு விழா நேற்று செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணம் 'ஜே ஹோட்டலில்' நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஆளுநர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர், வடக்கின் சுற்றுலாத்துறை விருத்தி மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்துத் தெரிவிக்கையில்,

எமது மாகாணத்தில் மறைந்து கிடக்கும் பொக்கிஷங்கள், புராதன தலங்கள், அமைதி தவழும் கடற்கரைகள் மற்றும் உயிரோட்டமுள்ள பாரம்பரியங்களை மிக அழகாக வெளிப்படுத்தும் வகையில் 'முருகன் ஆன்மீகச் சுற்றுலாப் பாதை' மற்றும் 'இராமாயண ஆன்மீகச் சுற்றுலாப் பாதை' ஆகிய இரண்டு முக்கிய நூல்களை வெளியிடுவதில் நாம் பெரு மகிழ்ச்சியடைகின்றோம். இவ்வெளியீடுகளானவை, வருகை தருவோரை வடக்கின் உண்மையான சாராம்சத்தை ஆழமாக ஆராய்ந்து அனுபவிப்பதற்குத் தூண்டும் விலைமதிப்பற்ற வழிகாட்டிகளாக அமையும்.

எமது பிராந்தியங்களுக்கிடையில் நிலவும் வலுவான வரலாற்று மற்றும் ஆன்மீகத் தொடர்புகள் காரணமாக, இம்முயற்சிகள் இந்தியாவிலிருந்தும், சர்வதேசத்திலிருந்தும் வருகை தரும் யாத்திரிகர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை நிச்சயம் அதிகரிக்கச் செய்யும். மிக முக்கியமாக, எமது மாகாணத்தின் மொத்த உற்பத்தியில் செழிப்பான சுற்றுலாத்துறையானது இன்றியமையாத பங்களிப்பைச் செலுத்துகின்றது. இது நிலையான வேலை வாய்ப்புகளை உருவாக்குவதுடன், எமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழும் சிறு மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளின் வளர்ச்சிக்கும் வித்திடுகின்றது.

வடக்கை நோக்கி வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ள போதிலும், அதனை மேலும் அதிகரிக்க வேண்டிய தேவை உள்ளது. மாண்புமிகு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அவர்கள் தலைமையிலான அரசாங்கம், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கான பணிகளை ஆரம்பித்துள்ளது. அதேபோன்று காங்கேசன்துறை துறைமுகமும் பயணிகள் போக்குவரத்துக்கு ஏற்றவாறு மேலும் அபிவிருத்தி செய்யப்படும். இவையிரண்டும் நிறைவடையும்போது, வடக்கு மாகாணத்துக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் பாரிய அதிகரிப்பு ஏற்படும்.

தற்போதைய நிலையில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான தரை வழிப் பயணத் தூரம் மற்றும் அதற்கான நேரம் என்பன சுற்றுலாப் பயணிகளைப் பொறுத்தவரையில் சிரமமானதாக உள்ளன. எனவே, கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்கு உள்ளூர் விமானச் சேவைகளை ஆரம்பிப்பதன் மூலம் இந்த நெருக்கடிகளைக் குறைக்க முடியும் என நான் நம்புகின்றேன். அரசும் இது தொடர்பில் சாதகமான பார்வைகளையே கொண்டுள்ளது.

அதேநேரம், வடக்கு மாகாணத்தில் சில காலப்பகுதிகளில் இங்குள்ள ஹோட்டல்கள் மற்றும் தங்குமிடங்களில் அறைகளைப் பெற்றுக்கொள்வது கடினமானதாக உள்ளது. அந்தளவு தூரத்துக்கு அவை நிரம்பி விடுகின்றன. எனவே, எதிர்காலத்தில் சுற்றுலாப் பயணிகள் அதிகரிக்கும்போது, அந்தத் தேவையை ஈடுசெய்யும் வகையில் முதலீட்டாளர்களால் புதிய ஹோட்டல்கள் மற்றும் தங்குமிட வசதிகள் உருவாக்கப்பட வேண்டும். சுற்றுலாத்துறை சார்ந்து இங்கு வளர்ச்சியடைந்து வரும் இத்தகைய வாய்ப்புகளை எமது மக்கள் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.- என்றார்.

இந்த நிகழ்வில் சுற்றுலா வழிகாட்டி நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன. அத்துடன் சுற்றுலாத்துறையின் மேம்பாட்டுக்குச் சிறப்பாகப் பங்களிப்புச் செய்தவர்களுக்கு விருதுகளும் கௌரவிப்புகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினராக யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி, சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் தனுஜா முருகேசன், மாவட்டச் செயலாளர்கள், மத்திய சுற்றுலாத் துறை அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.எல்.நசீர், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் சுற்றுலாத் திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் ஆய்வுப் பணிப்பாளர் கலாநிதி பிரசாத் ஜெயசூரிய ஆகியோரும், வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவர் அ.பத்திநாதன், பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.



## கிராம உத்தியோகத்தர்கள் மீது தொடர் தாக்குதல்:

# முசலி பிரதேச செயலாளர் பிரிவில் சம்பவத்தைக் கண்டித்துப் போராட்டம்!

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

முசலி பிரதேச செயலாளர் பிரிவில் கடமையாற்றும் கிராம உத்தியோகத்தர்கள் தொடர்ந்து தாக்கப்படுகின்றமையைக் கண்டித்து இன்று புதன்கிழமை காலை முசலி பிரதேச செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் கிராம அலுவலகர் ஒருவர் தாக்கப்பட்ட நிலையில் சிலாபத்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஆனால் இவரைத் தாக்கியவர் இதுவரை கைது செய்யப்படவில்லை.

இந்த நிலையில் முசலி பிரதேச கிராம அலுவலர்கள் ஒன்றிணைந்து முசலி பிரதேச செயலகத்துக்கு முன்பாகத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன் கிராம அலுவலரைத் தாக்கியவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரசின் அனர்த்தம் தொடர்பான அறிவுறுத்தல்களுக்கு அமைய செயல்படும் போது பொது மக்களால் தாம் பாதிக்கப்படுகின்றனர் எனவும் அறிவித்தலுக்கு மாறாக நாம் எவ்வாறு செயல்படுவது என்றும் கேள்வி எழுப்பியதோடு, எங்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என முசலி பிரதேச கிராம உத்தியோகத்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





# 129ஆவது கல்பதரு தினத்துக்கு மட்டு இ.கி.மிஷனில் ஏற்பாடு

( வி.ரி.சகாதேவராஜா)

உலகளாவிய ராமகிருஷ்ண மிஷினில் நாளை வியாழக்கிழமை 129 ஆவது கல்பதரு தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

1886.01.01 இல் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் உலகுக்கு தெய்வீக அருளை அளித்த உன்னதமான நாள். அவரது சிஷ்யர்களிடையே பெரும் மாற்றத்தை ஏற்படுத்திய நாள் இதுவாகும்.

வேண்டியதை வழங்கும் கல்பதரு நாளை இராமகிருஷ்ண மிஷன் உலகளாவிய ரீதியில் வருடாவருடம் சிறப்பாக அனுஸ்டிப்பது வழமை.

அந்த வகையில் மட்டக்களப்பு கல்லடி ராமகிருஷ்ண ஆச்சிரமத்தில் நாளை வியாழக்கிழமை காலை 5.30 மணிக்கு சிறப்பு பூஜை மற்றும் பஜனை இடம்பெறும். தொடர்ந்து 8 மணிக்கு ஆராத்ரிகம் இடம்பெறவுள்ளது.

மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் முன்னிலையில் கல்பதரு தினம் அங்கு நடைபெறவுள்ளது.



# புத்தாண்டுப் பிறப்பை முன்னிட்டு தேவாலயங்களுக்கு பாதுகாப்பு!

(மட்டக்களப்பு நிருபர்)

புத்தாண்டு பிறப்பு முன்னிட்டு சகல கிறிஸ்தவ தேவாலயங்களுக்கும் விசேட பாதுகாப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதலின் பின்பு சகல கிறிஸ்தவ தேவாலயங்களுக்கும் புது வருட பிறப்பை முன்னிட்டு விசேட பாதுகாப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள புளியந்தீவு மரியாள் தேவாலயம், தாண்டவன்வெளி காணிக்கை மாதா தேவாலயம், ஈஸ்ட்டர் குண்டு தாக்குதலுக்கு இலக்கான சீயோன் தேவாலயம், மற்றும் இதர மெதடித்த தேவாலயங்கள் என மாவட்டத்தில் உள்ள சகல கிறிஸ்தவ தேவாலயங்களுக்கும் பொலிஸ், இராணுவ விசேட அதிரடி படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆலய நிர்வாகத்தின் கண்காணிப்பின் கீழ் வழிபாடுகளுக்கு வரும் பொதுமக்கள் தேவாலயங்களுக்குள் அனுமதிக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பாதுகாப்பு பிரிவினர் தேவாலயங்களைச் சூழ பலத்த பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.



# திருகோணமலை தம்பலகாமம் பிரிவில் குரங்குத் தாக்குதலுக்குள்ளான சிறுவன்!

(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை தம்பலகாமம் பொலிஸ் பிரிவில் உள்ள 98 ஆம் கட்டை அரபாநகர் பகுதியை சேர்ந்த சிறுவன் குரங்குக்கடிக்கு இலக்காகியுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று மாலை இடம் பெற்றுள்ளது. இவ்வாறு குரங்குக் கடிக்கு உள்ளான 12 வயதுச் சிறுவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சிறுவன் மாலை நேரத்தில் பள்ளிவாசலுக்கு மதக் கடமையை நிறைவேற்ற தொழுகைக்காக சென்ற வேலையில் குரங்கு தாக்கியுள்ளது என்று தெரியவருகிறது. சிறுவன் காயங்களுடன் தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அண்மைக்காலமாக குரங்கு தொடர்ச்சியாக மக்களுக்கு தொல்லை கொடுத்து வருவதால் வனஜீவராசிகள் திணைக்களத்தால் குரங்குகள் பிடிக்கப்பட வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.





# காரைதீவில் திருவாசக முற்றோதல்

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு இந்து சமய விருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் தினமும் ஆலயம் தோறும் திருவாசக முற்றோதல் இடம்பெற்று வருகின்றது.

ஓதுவார் ந.லோகராஜ் தலைமையில் எட்டு மணிநேரம் இந்தத் திருவாசக முற்றோதல் நடைபெற்று வருகின்றது.











# ஒரு லட்சம் மூலிகைச் செடிகளை நடும் திட்டம் கிழக்கு மாகாணத்தில்

(ஹஸ்பர் ஏ.எச்.)

ஒரு மில்லியன் மூலிகைச் செடிகளை நடும் மற்றும் ஒரு லட்சம் கிலோ மூலிகைகளைச் சேகரிக்கும் திட்டத்தின் கிழக்கு மாகாண ஆரம்ப நிகழ்வு நேற்று மட்டக்களப்பு – வாழைச்சேனை காகித தொழிற்சாலை வளாகத்திலும், திருகோணமலை – சம்பூர் விதுர கடற்படை முகாம் வளாகத்திலும் நடைபெற்றது.

நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர, வெளிவிவகாரம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அருண் ஹேமச்சந்திர, மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு, 'ஒசுசவிய' திட்டத்தின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி சமந்த கோரலே ஆரச்சி, மாகாண ஆயுள்வேத ஆணையாளர் வைத்தியர் எம்.ஏ. நபீல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.











# உத்தராகண்ட் பஸ் விபத்தில் 7 பேர் பலி; 12 பேர் படுகாயம்

உத்தராகண்ட் மாநிலத்தில் இடம் பெற்ற பஸ் விபத்தில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

உத்தராகண்ட் மாநிலம், அல்மோராவில் இருந்து ராம் நகருக்கு தனியார் பஸ் நேற்று காலை புறப்பட்டுள்ளது. இந்த பஸ்ஸில் ஓட்டுநர், நடத்துநர் உட்பட 19 பேர் பயணம் செய்தனர்.

பிகியாசைன் மலைப்பகுதி வீதியில் பஸ் சென்றபோது எதிர்பாராதவிதமாக 500 அடி ஆழ பள்ளத்தில் கவிழ்ந்தது. இதில் 7 பேர் உயிரிழந்தனர். 12 பேர் படுகாயம் அடைந்தனர்.

இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு உத்தராகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி, பிரதமர் மோடி ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். காயமடைந்தவர்களுக்கு அனைத்து உதவிகளையும் செய்ய உத்தரவிட்டுள்ளனர்.

# 2025 இல் இந்தியாவின் மாற்றங்கள், சாதனைகளை சமூக வலைதளத்தில் பட்டியலிட்டார் பிரதமர் மோடி

2025 ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி சமூக வலைதளத்தில் பிரதமர் மோடி நேற்று விரிவான பதிவு வெளியிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"நாட்டின் வளர்ச்சிக்காக கடந்த 11 ஆண்டுகளாக பல்வேறு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நடப்பு 2025 ஆம் ஆண்டில் மிகப்பெரிய சீர்திருத்தங்கள் அமல் செய்யப்பட்டன. இது, இந்தியாவின் ஆண்டாக நினைவு கூரப்படும்.

குறிப்பாக 2025 ஆம் ஆண்டில் ஜி.எஸ்.டி. வரி விகிதத்தில் மிகப்பெரிய மாற்றங்கள் செய்யப்பட்டன. 5 வீதம் மற்றும் 18 வீதம் என்ற இரு விகிதங்கள் மட்டும் அமுல் செய்யப்பட்டு உள்ளன. இதனால் அனைத்து வீடுகளிலும் 'பட்ஜெட்' சுமை குறைந்திருக்கிறது. குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள், விவசாயிகள் நிறைவான பலன்களை அடைந்து வருகின்றனர். பண்டிகை காலங்களில் அனைத்து பொருள் களின் விற்பனையும் கணிசமாக அதிகரித்தது.

2025 ஆம் ஆண்டில் தனிநபர் வருமான வரி விலக்கு உச்ச வரம்பு 12 லட்சம் இந்திய ரூபாவாக அதிகரிக்கப்பட்டு உள்ளது. வருமான வரிச் சட்டம் 1961 இற்கு பதிலாக வருமான வரிச் சட்டம் 2025 நிறைவேற்றப்பட்டு உள்ளது. இதன்மூலம் வரி நடைமுறையில் வெளிப்படைத்தன்மை உறுதி செய்யப்பட்டு உள்ளது.



100 கோடி இந்திய ரூபா வரை வருமானம் ஈட்டும் நிறுவனங்கள், சிறு நிறுவனங்களாக வரையறுக்கப்பட்டு இருக்கிறது. இந்திய காப்பீட்டுத் துறையில் 100 சதவீத அந்நிய முதலீட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.

கடல்சார் வணிகம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் 5 முக்கிய மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டு உள்ளன. இதன்மூலம் கடல்சார் வணிகம் கணிசமாக அதிகரிக்கும். காலத்துக்கு பொருந்தாத 71 பழைய சட்டங்கள் நீக்கப்பட்டு உள்ளன.

நாடு முழுவதும் எளிதாக வணிகம் செய்வதற்கான சூழல் உருவாக்கப்பட்டு உள்ளது. இதன் காரணமாக மின்னணு, 'ஓட்டோ மொபைல்' உட்பட பல்வேறு துறைகளில் உள்நாட்டு உற்பத்தி அதிகரித்து, ஏற்றுமதியும் கணிசமாக அதிகரித்து வருகிறது.

29 பழைய தொழிலாளர் சட்டங்கள் ஒன்றிணைக்கப்பட்டு, புதிதாக 4 தொழிலாளர் சட்டங்கள் அமுல் செய்யப்பட்டு உள்ளன. இதன்மூலம் பெண்கள், அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலன்கள் பாதுகாக்கப்பட்டு உள்ளன. அதேநேரம் தொழில் துறையின் வளர்ச்சியும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

இந்திய அணு சக்தி துறையில் தனியார் நிறுவனங்கள் பங்கேற்கும் வகை செய்யும் புதிய அணுசக்தி சட்டம் நிறைவேற்றப்பட்டு உள்ளது. இதன்மூலம் இந்திய அணு சக்தி துறை அபார வளர்ச்சி அடையும். 'ஹைட்ரஜன்' எரிசக்தி உற்பத்திக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

புதிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி சட்டம் (ஜி ராம் ஜி) நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு உள்ளது. இதன்மூலம் ஊரக பகுதி மக்களுக்கான வேலைவாய்ப்பு 100 நாள்களில் இருந்து 125 நாள்களாக அதிகரிக்கப்பட்டு உள்ளது.

யு.ஜி.சி, ஏ.ஐ.சி.டி.இ, என்.சி.டி.இ. உள்ளிட்ட உயர் கல்வி அமைப்புகளை ஒன்றிணைத்து இந்திய உயர் கல்வி ஆணையம் அமைக்கப்பட உள்ளது. இதன்மூலம் கல்வித் துறையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படும்.

மத்திய அரசின் சீர்திருத்தங்களால் சிறு வணிகர்கள், இளம் தொழில்நுட்ப நிபுணர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், நடுத்தர வர்க்க மக்கள் என அனைத்து தரப்பினரும் பலன் அடைந்து வருகின்றனர்." என்று குறிப்பிட்டுள்ளார்.



# இந்தியாவில் சுரங்கப்பாதையில் இரு ரயில்கள் மோதி விபத்து!

## 60 பேர் காயம்

இந்தியாவின் உத்தரகாண்ட் மாநிலம் சாமோலி மாவட்டத்தில் உள்ள நீர்மின் திட்ட சுரங்கப்பாதையினுள் நேற்றிரவு இடம்பெற்ற ரயில் விபத்தில் சுமார் 60 பேர் காயமடைந்துள்ளனர்.

சாமோலி மாவட்டத்தில் அலக்நந்தா ஆற்றின் குறுக்கே 444 மெகா வாட் உற்பத்தித் திறன் கொண்ட நீர்மின் திட்டமொன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக ஹெலாங் மற்றும் பிப்பல்கோட்டி இடையே சுரங்கப்பாதை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இந்த சுரங்கப்பாதை கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் மற்றும் அதிகாரிகள் பயணித்த ரயிலும், கட்டுமானப் பொருள்களை ஏற்றி சென்ற மற்றொரு ரயிலும் மோதிக்கொண்டதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விபத்து நடந்த சமயத்தில் பணியாளர்கள் பயணித்த ரயிலில் மொத்தம் 109 பேர் இருந்தனர் எனவும் அவர்களில் 60 பேருக்குக் காயம் ஏற்பட்டதாகவும் ஏனையோர் பாதுகாப்பாக மீட்கபப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்தின் பின்னர் கட்டுமானப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு, விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் மற்றும் திட்ட அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சுரங்கப்பாதையினுள் சமிக்ஞை குறைபாடு ஏற்பட்டதா அல்லது மனிதத் தவறுகள் காரணமா என்ற கோணத்தில் விசாரணை நடைபெறுவதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.







### ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கை:

# மத்தியஸ்தம் செய்ததாக சீனா அறிவிப்பு; திட்டவட்டமாக மறுக்கின்றது இந்திய அரசு

பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா ஒபரேஷன் சிந்தூர் இராணுவ நடவடிக்கையை எடுத்ததை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையே மத்தியஸ்தம் செய்ததாக சீனா கூறி உள்ள நிலையில், இந்தியா அதனை திட்டவட்டமாக மறுத்துள்ளது.

கடந்த ஏப்ரல் 22 ஆம் திகதி ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சுற்றுலாப் பயணிகள் 26 பேர் உயிரிழந்தனர். இந்த பயங்கரவாத தாக்குதலின் பின்னணியில் பாகிஸ்தான் இருந்தது உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து, இந்தியா அந்த நாட்டுக்கு எதிராக ஒபரேஷன் சிந்தூர் இராணுவ நடவடிக்கையை தொடங்கியது. பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாம்கள் குறிவைக்கப்பட்டு தாக்கி அழிக்கப்பட்டன. இதில், ஏராளமான பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து, இந்தியா மீது பாகிஸ்தான் இராணுவம் தாக்குதல் நடத்தியது. இந்தியா கொடுத்த பதிலடியில் அந்த நாட்டின் விமானப் படைத் தளம் கடுமையாக சேதமடைந்தது. இந்தியாவின் பதிலடி தீவிரமாக இருந்ததை அடுத்து, பாகிஸ்தான் இராணுவ நடவடிக்கைகளின் தலைமை இயக்குநர் (டி.ஜி.எம்.ஓ), இந்திய டி.ஜி.எம்.ஓவை தொடர்பு கொண்டு போரை முடிவுக்குக் கொண்டு வர வேண்டுகோள் விடுத்தார். இதை இந்தியா ஏற்றது. இதையடுத்து, போர் முடிவுக்கு வந்தது. இதை இந்திய இராணுவம் அப்போதே செய்தியாளர்களிடம் விளக்கியது.



எனினும், இந்தியா - பாகிஸ்தான் போரை தான் முடிவுக்குக் கொண்டு வந்ததாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பலமுறை கூறினார். எனினும், இந்திய வெளியுறவுத் துறை அதனை தொடர்ந்து மறுத்து வருகிறது. இந்நிலையில், போரின் போது பாகிஸ்தானுக்கு ஆயுதங்களைக் கொடுத்து உதவிய சீனா, இந்தியா - பாகிஸ்தான் போரை முடிவுக்குக் கொண்டு வர தாங்கள் மத்தியஸ்தம் செய்ததாக கூறி உள்ளது.

நேற்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யி,

"இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு முன் எப்போதும் இல்லாத அளவாக இந்த ஆண்டு உள்ளூர் போர்களும் எல்லை தாண்டிய மோதல்களும் அடிக்கடி வெடித்தன. நீடித்த அமைதியை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் சீனா தொடர்ந்து ஈடுபட்டது. வடக்கு மியான்மர், ஈரான் அணுசக்திப் பிரச்சினை, இந்தியா-பாகிஸ்தான் இடையேயான பதட்டம், இஸ்ரேல்-பாலஸ்தீனம் பிரச்சினை, கம்போடியா-தாய்லாந்து பிரச்சினை ஆகியவற்றில் நாங்கள் மத்தியஸ்தம் செய்தோம்." என்று கூறி இருந்தார்.

வாங் யி-யின் கூற்றை இந்தியா திட்டவட்டமாக மறுத்துள்ளது.

"இதுபோன்ற கூற்றுக்களை நாங்கள் ஏற்கனவே மறுத்துள்ளோம். இந்தியா-பாகிஸ்தான் இடையிலான இருதரப்பு பிரச்சினைகளில் மூன்றாம் தரப்புக்கு எந்த பங்கும் இல்லை. இந்தியா-பாகிஸ்தான் போர் நிறுத்தம் என்பது இரு நாடுகளின் டி.ஜி.எம்.ஓ-க்களுக்கு இடையே நேரடியாக ஒப்புக் கொள்ளப்பட்டது. இது குறித்து எங்கள் நிலைப்பாட்டை நாங்கள் பலமுறை தெளிவுபடுத்திவிட்டோம்." என்று இந்திய தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காசா, ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் பணியாற்றும் 37 சர்வதேச மனிதாபிமான உதவி நிறுவனங்களுக்குத் தடை

### இஸ்ரேல் அதிரடி அறிவிப்பு

காசா மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் பணியாற்றி வரும் 37 சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் உரிமங்களை ரத்து செய்யப் போவதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

புதிய பதிவு விதிமுறைகளை இந்த நிறுவனங்கள் பின்பற்றத் தவறிவிட்டதாகக் கூறி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நாளை முதல் இந்த நிறுவனங்களின் உரிமங்கள் இடைநிறுத்தப்படும் என்றும் அடுத்த 60 நாள்களுக்குள் அவை தமது செயல்பாடுகளை முழுமையாக நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் இஸ்ரேல் உத்தரவிட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட நிறுவனங்களில் ActionAid, International Rescue Committee, Norwegian Refugee Council, CARE மற்றும் Medical Aid for Palestinians போன்ற உலகப் புகழ்பெற்ற மனிதாபிமான அமைப்புகளும் அடங்குகின்றன என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த உதவி நிறுவனங்கள் தங்களின் ஊழியர்களின் முழுமையான தனிப்பட்ட விபரங்களைச் சமர்ப்பிக்கத் தவறிவிட்டன என இஸ்ரேல் குற்றம்சாட்டியுள்ளது.

மனிதாபிமான அமைப்புகளுக்குள் பயங்கரவாதக் குழுக்கள் ஊடுருவதைத் தடுக்கவே இந்தத் தகவல்கள் கோரப்பட்டதாக இஸ்ரேலிய புலம்பெயர்ந்தோர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.



மேலும், "மனிதாபிமான உதவி வரவேற்கத்தக்கது, ஆனால் மனிதாபிமானக் கட்டமைப்புகளைப் பயங்கரவாதத்துக்காகப் பயன்படுத்துவதை ஏற்க முடியாது" என இஸ்ரேலிய அமைச்சர் அமிச்சாய் சிக்லி தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் இந்த முடிவுக்கு பிரித்தானியா, பிரான்ஸ், கனடா, ஜப்பான் மற்றும் சுவிட்சர்லாந்து உட்பட 10 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, பாலஸ்தீனப் பகுதிகளில் பணியாற்றும் மனிதாபிமானக் குழுக்களின் கூட்டமைப்பு, இஸ்ரேலின் புதிய பதிவு முறை அரசியல் உள்நோக்கம் கொண்டது என்று கூறியுள்ளது.

இந்த நிறுவனங்களே காசாவில் உள்ள பெரும்பாலான கள மருத்துவமனைகள், நீர் மற்றும் சுகாதார சேவைகள் மற்றும் ஊட்டச்சத்து மையங்களை நிர்வகித்து வருகின்றன.

இந்தத் தடையால் இலட்சக்கணக்கான மக்கள் அத்தியாவசிய உதவிகளின்றி தவிக்கும் நிலை ஏற்படும் என அவர்கள் எச்சரித்துள்ளனர்.

இருப்பினும், இந்தத் தடையால் உதவி விநியோகம் பாதிக்கப்படாது என்றும், ஐநா அமைப்புகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பிற வழிகள் மூலம் உதவிகள் தொடர்ந்து வழங்கப்படும் என்றும் இஸ்ரேல் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

கனடா முரசு
புதன்கிழமை | 31/12/2025

கனடாவில் பரவி வருகின்ற பக்டீரியா குறித்து எச்சரிக்கை



03▶




# கனடாவை தொடர்ந்து தாக்கும் குளிர்கால வானிலை நீடிக்கும்

**கனடாவை தொடர்ந்து தாக்கும் கடுமையான குளிர்கால வானிலை தொர்ந்தும் நீடிக்கும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

**அண்மையில் ஒன்டாரியோ மற்றும் கியுபெக் மாகாணங்களை கடுமையாக தாக்கிய பனிப் புயல் காரணமாக, வீதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பத்தாயிரக்கணக்கான மக்கள் மின்சாரமின்றி தவித்தனர்.**

**கிழக்கு ஒன்டாரியோ முதல் அட்லாண்டிக் பிராந்தியம் வரை பரவிய பல மாகாணங்களில் மஞ்சள் மற்றும் செம்மஞ்சள் வானிலை எச்சரிக்கைகள் தொடர்கின்றன.**

மில்லியன்கணக்கான மக்கள் சீரற்ற காலநிலை பாதிப்பினால் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒன்டாரியோ மற்றும் கியுபெக்கில், உறைமழை, பனிக்காற்று மற்றும் பலத்த காற்று காரணமாக ஒரு கட்டத்தில் பத்தாயிரக்கணக்கான வீடுகள் மின்சாரம் இன்றி இருந்தன என அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த ஒரு வாரமாக, கனடாவின் பல பகுதிகளில் பனிப்புயல், கடும் குளிர் அலை, உறைமழை என தொடர் வானிலை தாக்கங்களை சந்தித்து வருகிறது. பிரிட்டிஷ் கொலம்பியா மாநிலத்தின் ஹைடா குவாய் பகுதியில், அதிக மழை காரணமாக அதிவேக நெடுஞ்சாலை 16 இந்த ஒரு பகுதி சேதமடைந்துள்ளது. இதனால், தீவின் வடக்கு - தெற்கு பகுதிகளை இணைக்கும் முக்கிய பாதை துண்டிக்கப்பட்டது.













# கனடாவின் அல்பர்டா மாகாணத்தில் ஆழமான பனியில் விழுந்து பெண் பலி

கனடாவின் அல்பர்டா மாகாணத்தில் உள்ள சன்ஷைன் வில்லேஜ் ஸ்கீ ரிசோர்ட் பகுதியில் இடம்பெற்ற விபத்தில், 47 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த வார இறுதியில், மிகவும் பிரபலமான கிரீன் ரன் எனப்படும் எளிதான 'ஸ்கீ' பாதையில் 'ஸ்கீயிங்' செய்து கொண்டிருந்தபோது, அந்த பெண் ஆழமான மென்மையான பனிக்குள் தவறி விழுந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்திற்கு அவசர மருத்துவ சேவைகள் மற்றும் விமானம் விரைந்து சென்றன. எனினும், பல மணி நேரம் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கும் பிறகு, அந்த பெண்ணை மீட்க முடிய வில்லை. உயிரிழந்த பெண் டொராண்டோவைச் சேர்ந்த ஃபாரா மெர்சண்ட் என குடும்பத்தினர் உறுதி செய்துள்ளனர்.

இந்த மரணம் சந்தேகத்திற்குரியதாக இல்லை என்றும், மரணத்தின் சரியான காரணத்தை மருத்துவ பரிசோதகர் தீர்மானிப்பார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆரம்ப தகவல்களின்படி, அந்த பெண் ஆழமான பனியில் மூழ்கியதால் மூச்சுத்திணறல் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.



# டொராண்டோவில் கடும் போக்குவரத்து நெரிசல்; கட்டுப்படுத்த புதிய பொறுப்பதிகாரி நியமனம்

டொராண்டோ மாநகரம் தனது போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த புதிய பொறுப்பதிகாரியை நியமித்துள்ளது.

இதற்கமைய போக்குவரத்து நெரிசல் கண்காணிப்பு தலைமை அதிகாரியாக ஆண்ட்ரூ போஸ்லன்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.


இவர் எதிர்வரும் ஜனவரி 5 ஆம் திகதி பதவியேற்கிறார்.

இந்த பதவியை உருவாக்குவதற்கு டொராண்டோ மாநகரசபை ஏற்கனவே ஒப்புதல் அளித்திருந்தது.



போக்குவரத்து நெரிசலை குறைக்கும் திட்டங்கள் உருவாக்குவது, வசதிக்குரிய கட்டுமான ஒழுங்குமுறை கொண்டு வருவது, FIFA World Cup 2026 இல் டொராண்டோவில் நடைபெறும் போட்டிகளுக்கான போக்குவரத்து திட்டத்தை கவனிப்பது போன்றவை அவரின் பொறுப்புக்களாகும்.

இந்த புதிய நியமனம் டொராண்டோவின் போக்குவரத்து சவால்களுக்கு தீர்வைத் தேடுவதற்கான ஒரு முக்கியமான படியாக கருதப்படுகிறது.



# கனடாவில் பரவி வருகின்ற பக்டீரியா குறித்து எச்சரிக்கை

கனடாவில் ஆபத்தான பக்டீரியா தொற்று தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கால்கரி நகரில் வாழும் வீடில்லா மற்றும் நிலையற்ற குடியிருப்பில் உள்ள பெரியவர்கள் மத்தியில், எச்.ஐ.பி Haemophilus influenzae type b (Hib) எனப்படும் அரிய பாக்டீரியா பரவி வருவதாக கனடாவின் அல்பேர்டா மாகாண சுகாதார அதிகாரிகள், எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

"மரபணு ரீதியாக வேறுபட்ட ஒரு Hib வகை காரணமாக, ஆழமான (invasive) Hib தொற்றுகளின் ஒரு குழுமம் கண்டறியப்பட்டுள்ளது" என சுகாதார பணியாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"இந்த Hib வகை இதற்கு முன் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் பதிவாகியுள்ளது. தற்போது அது, வீடில்லாதவர்கள் அல்லது நிலையற்ற வீடுகளில் வாழும் பெரியவர்கள் மத்தியில் எங்கள் பிராந்தியத்திலும் காணப்படுகிறது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு, வான்கூவர் தீவில் Hib பரவல் ஒன்று பதிவாகி, வீடில்லா மக்களும் போதைப்பொருள் பயன்படுத்துவோரும் அதனால் பாதிக்கப்பட்டனர்.

அப்போது ஒருவர் உயிரிழந்தார் என அறிவிக்கப்பட்டிருந்தது. அல்பேர்டா அரசின் தகவலின்படி, 2025ஆம் ஆண்டில் கால்கரி பிராந்தியத்தில் 8 Hib சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இது, 2024ஆம் ஆண்டில் 3 சம்பவங்கள் மற்றும் 2019 முதல் 2023 வரை 2 சம்பவங்கள் இருந்த நிலையில், குறிப்பிடத்தக்க உயர்வாகும்.

"Hib ஒரு காலத்தில் குழந்தைகளில் அதிகமாக காணப்பட்ட தொற்று. ஆனால் தடுப்பூசி அறிமுகப்படுத்தப்பட்டு, குழந்தைகளுக்கான வழக்கமான தடுப்பூசி திட்டத்தில் சேர்க்கப்பட்ட பிறகு, அதன் தாக்கம் பெரிதும் குறைந்தது" என டொரண்டோ ஜெனரல் மருத்துவமனையின் தொற்றுநோய் நிபுணரான டாக்டர் ஐசக் போகோச் தெரிவித்துள்ளார்.

"Hib மிகவும் பொதுவான தொற்று அல்ல. இருப்பினும், மருத்துவமனைகளில் பணிபுரிபவர்கள் அவ்வப்போது இதைப் பார்ப்பது ஆச்சரியமல்ல. இது ஏற்கனவே அழுத்தத்தில் உள்ள சுகாதார அமைப்புக்கு பெரிய சுமையை ஏற்படுத்தாது. ஆனால் வீடில்லா நிலை போன்ற ஆபத்து காரணிகளுடன் வரும் நோயாளிகளில் இந்த தொற்றை கருத்தில் கொள்ளுதல் அவசியம்" என அவர் கூறியுள்ளார்.

இந்த Hib தொற்று கால்கரியில் இன்னும் அரிதானதே என்றாலும், "இந்த பாக்டீரியா வகையின் தனித்துவமான பரவல் தன்மை (epidemiology) காரணமாக விழிப்புணர்வு தேவை" என நினைவுக் குறிப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

Hib தொற்றின் அறிகுறிகள் பெயரில் ஒற்றுமை இருந்தாலும், Hib என்பது இன்ஃப்ளுயன்சா வைரஸுடன் தொடர்பற்றது; இது ஒரு பாக்டீரியா ஆகும். ஆரம்ப நிலையில், காய்ச்சல் போன்ற அறிகுறிகள், காது அல்லது சைனஸ் தொற்றுகள் போன்றவை ஏற்படலாம்.

அரிதான, ஆனால் தீவிரமான நிலைகளில், இந்த பாக்டீரியா இரத்தத்தில் பரவி பல உறுப்புகளைத் தாக்கி, அதிக காய்ச்சல், மயக்கம், வாந்தி போன்ற அறிகுறிகளை உருவாக்கி, உயிரிழப்புக்கும் காரணமாகலாம் என கனடிய சுகாதார நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# கத்தி குத்து சம்பவம் தொடர்பில் பீட்டர்பரோ நகரில் ஒருவர் கைது

கனடாவின் ஓஷாவா நகரில் கத்தி குத்து கொலை சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த நபர், பீட்டர்பரோ நகரில் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

44 வயதான மைக்கேல் வாட்டர்மேன் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் தற்போது அங்கு மற்றொரு கொலை வழக்கிலும் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ளார்.

டால்ஹௌசி மற்றும் ஆலிமர் வீதிகள் அருகிலுள்ள ஒரு வீட்டில் அவர் இருப்பது கண்டறியப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

அந்த வீட்டுக்கு சென்ற பொலிஸாரிடம், அவர் தானாகவே சரணடைந்துள்ளார் என அதிகாரிகள் தெரிவித்தனர். கடந்த 6 ஆம் திகதி பீட்டர்பரோவில் நடந்த கொலை சம்பவம் தொடர்பில் இவருக்கு எதிராக இரண்டாம் நிலை கொலை குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதேநேரம், கடந்த செவ்வாய்க்கிழமை ஓஷாவாவில் நடந்த கத்தி குத்து சம்பவத்துடனும் இவர் தொடர்புடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம், பார்க் ரோடு சவுத் மற்றும் ஜான் ஸ்ட்ரீட் அருகே நடந்ததாக கூறப்படுகிறது. இது இந்த ஆண்டில் டர்ஹாம் பிராந்தியத்தில் பதிவான ஒன்பதாவது கொலை சம்பவமாகும்.

